Pg-No: 24

45.

அனுப்புநர்
திரு இரா.சு. மாரியப்பன், B.E., M.B.A.,
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
தூத்துக்குடி மாவட்டம்
51, மேலரதவீதி, தூத்துக்குடி-2.
தொலைபேசி 0461 2322651
மின்னஞ்சல் dtcpttkddistrict@gmail.com

பெறுநர்
செயல் அலுவலர்
திருச்செந்தூர் பேரூராட்சி
தூத்துக்குடி மாவட்டம்

ந.க.எண் 863/2020 தூமா அ, நாள் 17.06.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052, ஆனி 3

அய்யா,

**பொருள்:** மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம் - திருச்செந்தூர் வட்டம் - திருச்செந்தூர் பேரூராட்சி - கீழத்திருச்செந்தூர் கிராமம் - சர்வே எண்கள் 350/4பி, 351/4ஏ - ல் 9150.00 சமீ (2.26 ஏக்கர்) பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சிறப்பு நிபந்தனையுடன் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது - தொடர்பாக.

**பார்வை:**
1. மனுதாரர் திருமதி என். மாரியகேஸ்வரி விண்ணப்பம் நாள் 28.02.2020 மற்றும் 10.06.2021
2. செயல் அலுவலர், திருச்செந்தூர் பேரூராட்சி கடிதம் ந.க. எண் 808/2019, நாள் 05.03.2021
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண் 6530/2020/TCP-6, நாள் 28.04.2021
4. அரசாணை எண் 181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (ந.வ4(1) துறை, நாள் 09.12.2020

---

பார்வை 1–ல் காணும் விண்ணப்பத்துடன் பெறப்பட்ட தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், திருச்செந்தூர் பேரூராட்சி, கீழத்திருச்செந்தூர் கிராமம், சர்வே எண்கள் 350/4பி, 351/4ஏ-ல் 9150.00 சமீ (2.26 ஏக்கர்) பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு பார்வை 3-ல் காணும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் உத்தரவு மூலம் ம.வ/ந.ஊ.இ எண் 98/2021 என்ற எண்ணில் நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் ரூ.12300/- (ரூபாய் பன்னிரெண்டாயிரத்து முன்னூறு மட்டும்) நன்னிலை வரி அரசு கணக்கில் 10.06.2021-ல் செலுத்தப்பட்டு பெறப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு வரைபடத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும்.

மேற்படி தொழில் நுட்ப இசைவு வழங்கப்பட்ட வரைபடம் மற்றும் நிபந்தனைகள் இத்துடன் தொடர் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
தூத்துக்குடி - 2
18/6/21

இணைப்பு

1. பார்வை 3-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம்
2. மனைப்பிரிவு வரைபடம் நிபந்தனைகளுடன் 2 தொகுப்புகள்
3. அசல் ஆவணம் எண்கள் 270/2021, 271/2021

நகல்

1. திருமதி .என். மாரிமகேஸ்வரி, 77, தெற்கு புதுத்தெரு, திருச்செந்தூர் டவுண், தூத்துக்குடி மாவட்டம். — கடிதம் மட்டும்
2. செயலாளர் (திட்டம்), தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம் (TNRERA), 1ஏ, காந்தி இர்வின் பாலம் ரோடு முதல் தளம், எழும்பூர், சென்னை (வரைபட நகல் மற்றும் கடிதம்)
3. தொழில் நுட்ப வைப்பறை (வரைபடம் 1 மற்றும் நிபந்தனைகள் படிவம் -1)

## திருச்செந்தூர் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

பிறப்பிப்பவர் : மு.ஆனந்தன்

ந . க. எண். 808/2019 நாள் : 05.08.2021

பொருள் : மனைபிரிவு அங்கீகாரம் – தூத்துக்குடி மாவட்டம்– திருச்செந்தூர் பேரூராட்சி — கீழ் திருச்செந்தூர் கிராமம் – சர்வே எண். 350/4பி, 351/4ஏல்9150.00 ச.மீ (2.26 ஏக்கர்) பரப்பில் குடியிருப்பு மனைபிரிவு அமைத்துள்ளது – தொழில் நுட்ப அங்கீகாரம் பெறப்பட்டது – மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது

பார்வை :

1. திருமதி. என். மாரிமகேஸ்வரி என்பவரது விண்ணப்பம் நாள். 20.12.2019
2. தூத்துக்குடி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) அவர்களது தொழில்நுட்ப அங்கீகார எண். 863/2020தூமாஅ நாள். 17.06.2021
3. சாலை மற்றும் பூங்கா ஒப்படைப்பு திருச்செந்தூர் சார்பதிவாளர் அலுவலக தானபத்திரம் எண். 270/2021 நாள். 29.01.2021
4. தமிழ்நாடு மின் சார வாரியத்திற்கு ஒப்படைப்பு தானபத்திரம் எண். 271/2021 நாள். 29.01.2021
5. அரசாணை எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள். 04.05.2017
6. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை சுற்றிக்கை கடிதம் ந.க.எண்.6530/2020/TCP–6, நாள்.28.04.2021
7. திருநெல்வேலி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களது தொழில்நுட்ப அங்கீகார எண். 863/2020தூமாஅ நாள். 17.06.2021 மற்றும் மனைப்பிரிவு ம.வ./ந.ஊ.இ. எண். 98/2021 நாள். 30.04.2021
8. தொடர்புடைய ஆவணங்கள்

ஆணை:

பார்வை 1ல் காணும் திருமதி. என். மாரிமகேஸ்வரி என்பவரது விண்ணப்பத்தில் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சியில் கீழ் திருச்செந்தூர் கிராமம் சர்வே எண். 350/4பி மற்றும் 351/4ஏ – ல் 9150.00 ச.மீ (2.26 ஏக்கர்) பரப்பில் அமையும் குடியிருப்பு மனைபிரிவுகளாக 40 எண்ணம் பிளாட் அமைக்க விண்ணப்பம் செய்யப்பட்டு.

பார்வை 3ல் காணும் திருச்செந்தூர் சார்பதிவாளர் அலுவலக தானபத்திரத்தின் படி சாலை மற்றும் பூங்கா பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. பார்வை 4ல் திருச்செந்தூர் சார்பதிவாளர் அலுவலக ஒப்படைப்பு தானபத்திரத்தின் படி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பார்வை 5ல் காணும் அரசாணை எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள். 04.05.2017ன் படி திட்டமில்லாத பகுதிக்கான நில உபயோக மாற்ற விதிகள் 2017 விதி 3ன் படி பரிசீலனைக் கட்டணமாக ரூ.40,000/– பாரத மாநில வங்கி வரைவோலை எண்.016358 நாள்: 04.08.2021- ன் மற்றும் விதி 9ன் படி மனுதாரர் மனையிடத்திற்கான சந்தை நில மதிப்பீட்டுத் தொகை 3% (மூன்று விழுக்காடு) தொகை ரூ. 13,190/–க்கு பாரத மாநில வங்கி செலுத்துச்சீட்டு எண்.02 நாள். 05.08.2021ன் படி தொகை செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை 7ல் காணும் தூத்துக்குடி மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களது தொழில்நுட்ப அங்கீகார 863/2021 தூமாஅ, நாள். 17.06.2021 மற்றும் மனைப்பிரிவு ம.வ./ந. ஊ.இ. எண். 98/2021 நாள். 21.12.2020ல் சிறப்பு நிபந்தனைகளின் படி அங்கீகாரம் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தெரு மின்விளக்கிற்கு ரூ. 30,000/–னை ஐ.சி.ஐ.சி. ஐ. வங்கி வரையோலை எண். 000024 நாள். 19.07.2021ன் படியும் வளர்ச்சி கட்டணம் (75X5871ச.மீக்கு) ரூ. 4,40,325/– பாரத மாநில வங்கி வரைவோலை எண். 016357 நாள்: 04.08.2021ன் படி செலுத்தப்பட்டுள்ளது. மனைபிரிவு அங்கீகாரம் செய்வதற்கான நெறிமுறைகள் நில உரிமைதாரர் செய்துள்ளார். எனவே மேற்காணும் கூடுதல் நிபந்தணைகளுக்குட்ப்பட்டு சர்வே எண். 350/4பி மற்றும் 351/4ஏ ல் போடப்பட்டுள்ள 40 எண்ணம் குடியிருப்பு மனைகளுக்கு மட்டும் இதன் மூலம் அங்கீகாரம் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

நிபந்தனைகள்

1. அங்கீகாரம் தொழில் நுட்ப அனுமதியும் மற்றும் மனைபிரிவு அங்கீகாரம் வழங்கிய எண். குறிப்பிட்டு விளம்பர போர்டு வைத்து புகைப்படம் எடுத்து கொடுக்க வேண்டும்.

2. அங்கீகாரம் வழங்கிய பின்பு அல்லது தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்ட பின்பு மனைபிரிவு செய்யப்பட்டுள்ள அளவுகளில் எவ்வித மாற்றமும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருநெல்வேலி அவர்களது முன் அனுமதி பெறாமல் செய்யக்கூடாது.

3. பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட (பத்திரபதிவு மூலம்) இடங்களை உட்பிரிவியர் அலுவலகத்தில் நில உரிமைதாரர் உட்பிரிவு செய்து உள்ளாட்சியிடம் ஒப்படைக்க வேண்டும் அல்லது இதற்கான செலவு கட்டணத்தை பேரூராட்சிக்கு செலுத்த பேரூராட்சி மூலம் உட்பிரிவு செய்து கொள்ள இசைவு தொவித்து நில உரிமைதாரர் பத்திரத்தில் எழுதி கையெழுத்திட்டு தர வேண்டும்.

4. மனைபிரிவு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள பிளாட்டுகளில் வீடு கட்டும்போது சம்பந்தப்பட்ட பிளாட் உரிமையாளர்கள் தனித்தனியே வரைபடம் கொடுத்து பேரூராட்சி மூலம் கட்டிட அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நில உரிமைதாரர் விற்பனை செய்யும் போது அறிவுறுத்த வேண்டும்.

5. நன்கொடை பத்திரம் மூலம் பேரூராட்சி அல்லது அரசுக்கு ஒப்படைக்கப்பட்ட இடங்கள் குத்தகைக்கு விடவோ நில உரிமைதாரரே பிளாட் போட்டு விற்பனை செய்வதோ அல்லது சொந்தமாக எடுத்துக்கொள்ளவோ கூடாது இதில் நில உரிமைதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை.

6. மனைபிரிவில் கடைகளுக்கு என்று ஒதுக்கப்பட்ட இடங்களை அதற்கான உபயோகத்திற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும்.

5/8/24

செயல் அலுவலர்
சிறப்புநிலை பேரூராட்சி,
திருச்செந்தூர்

05/08/2024

இணைப்பு:
அங்கீகரிக்கப்பட்ட வரைபடம்

பெறுநர்:

திருமதி. என். மாரிமகேஸ்வரி,
77, தெற்கு புதுத்தெரு,
திருச்செந்தூர்.

நகல் : நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள், தூத்துக்குடி மாவட்டம்